வசந்த மலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2051 / வைகாசி / JUNE - 2020

## கோவிட்-19 சிறப்பு மலர்




**27** சங்கங்களின் சுவையான **மெய்நிகர்** நிகழ்ச்சிக் கட்டுரைகள்
















பேரவையின் 2020 ஆம் ஆண்டுத் தமிழ் விழா (இணைய வழியில்)

இலக்கியத்தில் மருத்துவம் - உங்களுக்குத் தெரியுமா கேள்விகள்



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America
2020ஆம் ஆண்டுத் தமிழ்விழா
(இணைய வழி)
பட்டிமன்றம்
நடுவர்
பேரா. இராமசந்திரன்
சமூக ஊடகங்களின் ஆக்கபூர்வமான தாக்கம் யாரிடம் அதிகம்?
ஆண்களிடமா, பெண்களிடமா?
ஜூலை 4,
சனிக்கிழமை
பெண்களே...
திருமதி கவிதா ஜவகர்
ஆண்களே...
புலவர் ராமலிங்கம்
கலையரசி
அனிதா ராஜேஷ்
அபு கான்
ஜெய் முத்தழகு
ஒருங்கிணைப்பாளர்: திருமதி விஜி அழகர்
நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க (for links) :
https://fetnaconvention.org/

# பேரவைத் தலைவரிடமிருந்து...



பேரவைத் தலைவரிடமிருந்து...

அன்பிற்கினிய பேரவை உறுப்பினர் தமிழ்ச்சங்கத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பேரவைப் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், கொடையாளர்கள் அனைவரையும் 2020 வசந்தகால அருவி இதழ் வாயிலாகச் சந்திப்பதில் பேருவகை அடைகின்றேன்.

பேரவையின் 33 ஆவது தமிழ்விழா அட்லாண்டா மாநகரில் ஜூலை 3, 4, 5 தேதிகளில் நடக்கவிருந்ததை மாற்றி, அடுத்த ஆண்டு நடத்தவிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே, 33 ஆம் ஆண்டு பேரவைத் தமிழ்விழாவை 2020 பேரவைத் தமிழ்விழாவாக இணைய வழியில் நடத்தப் பேரவைச் செயற்குழு முழுவு செய்து தற்பொழுது அது நடைபெறவுள்ளது. கொரோனா தீநுண்மித் தொற்றுநோயால் உலகமே பல இன்னல்களை எதிர்கொண்டு வரும் நேரத்திலும், பேரவை கடந்த 32 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்திவந்த தமிழ்விழாக்களில் ஓர் இடைவெளி விழுந்துவிடாமல் இருக்கவேண்டி, நாம் 2020ஆம் ஆண்டு தமிழ்விழாவை இணையம் வழியாக ஜூலை 3, 4, 5 தேதிகளில் நடத்துகின்றோம். நீங்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கப் பேரவைச் செயற்குழு சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

10 ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையும், சிகாகோ தமிழ்ச்சங்கப் பொன்விழாவையும், பேரவையின் 32 ஆம் ஆண்டுத் தமிழ்விழாவையும் மிகவும் சிறப்பாகக் கடந்த ஆண்டு சிகாகோ நகரில் பேரவை நடத்திக் காட்டியது பேரவையின் சாதனைகளில் சாலச் சிறந்தது எனில் மிகையாகாது. விழாவின் வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் உளமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் பேரவை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றது.

ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுவதைப்போல் இம்முறையும் பேரவை விழாவில் பல புதுமையான முன்னெடுப்புகள் இடம்பெறவுள்ளன. பட்டிமன்றம், கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள், மரபுக்கலை நிகழ்ச்சிகள், வர்மக் கலை, இளையோர் கலந்துரையாடல், தமிழ்ச் சங்கங்களின் இணையக் கூடல் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள், மரபிசை, மக்களிசை, தமிழிசை, மெல்லிசை, திரைப்படக் கலைஞர்கள் நிகழ்ச்சி, உலகத் தமிழர் விழிப்புணர்வு நேரம், தொழில்முனைவோர் கூட்டம் எனப் பற்பல நிகழ்ச்சிகளுடன் இந்த விழா கடந்தகாலப் பேரவைத் தமிழ்விழாக்கள் போல, மிகவும் சிறப்பாக இணைய வழியில் நடக்கவுள்ளது.

இவ்வேளையில், 2020 பேரவைத் தமிழ்விழாவினைச் சிறப்பாக நடத்திமுடிக்க இரவு பகல் பாராமல் உழைத்துக்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான தன்னார்வத் தொண்டர்களைப் பேரவையின் சார்பாகப் பெரிதும் பாராட்டுகின்றேன். வடஅமெரிக்கா முழுவதும் பரவிவாழும் தமிழ் நெஞ்சங்களை இணையம் வழியாகச் சந்திப்பதில் பேருவகை கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் சாத்தான் குளத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் கண்டு நம் நெஞ்சம் மிகுந்த துயர் அடைகின்றது. இந்த மீறல்களைப் பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, தந்தையையும், மகனையையும் இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றது.

வடஅமெரிக்காவில் தமிழர்களை ஒன்றுபடுத்திவரும் தமிழ்ச்சங்கப் பேரவை, உலகத் தமிழரையும் ஓரணியில் திரட்ட இந்த விழா உதவும் என்று நம்புகின்றது.

தமிழராய் ஒன்றிணைவோம்!

**தமிழன்புடன், சுந்தர் குப்புசாமி**

**தலைவர், வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**

## வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை செயற்குழு




## வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை இயக்குனர் குழு



# ஆசிரியர் கடிதம்



வரலாறு காணாத அளவில் உலக மக்களின் நலனுக்கும், சமூகக் கூடல்களுக்கும் கடந்த பல மாதங்களாக, பெருமளவு பாதிப்பினை ஏற்படுத்தி வரும் இந்தக் கொரோனா காலத்திலும், தமிழ் உள்ளங்களைத் தளராத மனநிலையில் வைத்திருக்கும் நோக்கில், தங்கள் சங்கங்களில் விழுமியுள்ள பன்முகத் திறன்களையும், வெவ்வேறு நவீன தொழில் நுட்ப வழிகளையும் பயன்படுத்தி, நமது தமிழ்ச்சங்கங்கள் நடத்தியுள்ள பல்வேறு புதுமைகள் நிறைந்த, ஆக்க பூர்வ மெய்நிகர் நிகழ்ச்சிகளை, உங்களுக்காகத் தொகுத்துத் தருவதில் அருவிக்குழு பெருமகிழ்ச்சியடைகிறது.

இந்த ஆண்டின் வசந்த காலத்தில் நடந்திருக்கும் நிகரில்லா மெய் நிகர் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்று குறித்தும் அறிந்து கொள்வது உங்களுக்கு அலாதியான மகிழ்ச்சி அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழகம், அமெரிக்கா மற்றும் கனடாவிலுள்ள கலைஞர்களை ஒருங்கிணைத்து நடத்தப்பட்ட இன்னிசை, மக்களிசை, நகைச்சுவை நிகழ்ச்சிகள் மற்றும் பிற கலை நிகழ்ச்சிகள், சித்திரைத் திருவிழா, அன்னையர் தின விழா, மருத்துவர், நுண்ணுயிர் தொற்று மற்றும் பிற அறிவியல் அறிஞர்களின் உதவியுடன் நடத்தப்பட்ட கொரோனா விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வீட்டில் இருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி தொழில் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் விதமான மென்பொருள் பயிற்சி வகுப்புகள், சட்ட வல்லுனர்களுடனான விசா குறித்த கலந்துரையாடல்கள், கதை சொல்லும் நிகழ்ச்சிகள், ‘குவாரண்டைன் கலாட்டா’, ‘லாக்டவுன் அலப்பறைகள்’, ‘லாக்டவுனால் அதிகம் அல்லல்படுவது ஆண்களா? அல்லது பெண்களா’ - பேச்சரங்கம், செல்லப்பேச்சாளர் தேடல், பட்டிமன்றம், இணையவழி தமிழ்ப்பள்ளி வகுப்புகள், தமிழே அமுதே - புத்தகம் வாசிப்பு-பகிர்வு நிகழ்வுகள் என நம்மை பெருவியப்பிலாழ்த்தும் நிகழ்ச்சிகள் எத்தனை எத்தனை!

மேலும், இத்தகைய ஆபத்தான சூழலில், முன்னணியிலிருந்து பணியாற்றிவரும் மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள், காவலர்கள் மற்றும் தன்னார்வலர்களின் சேவையைப் பாராட்டும் வகையிலான நிகழ்வுகள், உணவு வழங்கல், கொரோனாவால் அமெரிக்காவிலும், இந்தியாவிலும் வாழ்வாதாரம் பாதித்தவர்களுக்கு நிதி திரட்டி அளித்தல், கொரோனா காலத்தில் ஏற்படும் பயணச் சிக்கல்களுக்கான வழிகாட்டல்கள், தன்னார்வலர்களுக்கு முகக் கவசங்கள் வழங்குதல் என சமூக நலனில் நமது சங்கங்களுக்கிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தும் விதமான நிகழ்வுகளுக்கென அவர்களுக்கு நமது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் வழங்குவோம்.

ஜூலை 2020 முதல் வாரத்தில், இணையவழியில் நடக்கவிருக்கும் பேரவையின் 2020 தமிழ் விழாவினை மகத்ததானதொரு விழாவாக நடத்திட பல்வேறு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தாங்களும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க அருவி உங்களை அன்புடன் அழைக்கிறது.

இந்த வசந்த மலருக்குக் கட்டுரைகள் வழங்கிய தமிழ்ச்சங்கச் செயற்குழுக்களுக்கு நன்றிகள் பல.

கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கட்டுரைகளைப் பெற்று, காலத்தே தொகுத்துக் கொடுத்து வந்துள்ள அருவி ஆசிரியர் குழுவினரின் அயராத உழைப்பை எடுத்துச் சொல்ல உகந்த வார்த்தைகள் இல்லை. அவர்கள் அனைவருக்கும் எனது பணிவான நன்றிகளையும், அன்பான வாழ்துக்களையும் உரித்தாக்குகிறேன்.


**அன்புடன் இளங்கோவன் தங்கவேலு செயின்ட் லூயிஸ், மிசௌரி.**




## உள்ளே...


| | |
|---|---|
| தமிழ்ச்சங்கங்களின் மெய்நிகர் நிகழ்ச்சிகள் | 06 |
| பேரவையின் 2020 ஆம் ஆண்டு தமிழ் விழா நிகழ்ச்சிச் செய்திகள் | 08 |
| பேரவையின் உதவும் இதயங்கள் குழு | 23 |


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America
"2020ஆம் ஆண்டுத் தமிழ்விழா – ஜீலை 3, 4 & 5 (இணைய வழி)"
(நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க http://fetnaconvention.org/)
முதல் நாள் ஜீலை 3 வெள்ளிக் கிழமை
5:30 am to 8:30 am ET | 2:30 pm to 5:30 pm PT
தமிழ்த்தாய் வாழ்த்து -வரவேற்புரை - தொழில் முனைவோர் கூட்டம் - திருக்குறள் ஓதுதல் -
சிறப்புச் சொற்பொழிவுகள் - கவியரங்கம்
கவிக்கோ
திரு. ஞானச்செல்வன்
கவியரங்கம்
திரு. பாலகிருஷ்ணன் IAS
சிறப்பு சொற்பொழிவு
(தொல்லியல்)
திரு. உதயச்சந்திரன் IAS
சிறப்பு சொற்பொழிவு
(தொல்லியல்)
இரண்டாம் நாள் ஜீலை 4 சனிக்கிழமை
10:30 am to 1:15 pm ET | 4:00 pm to 11:00 pm ET | 7:30 am to 10:15 pm PT | 1:00 pm to 8:00 am PT
சிறப்புச் சொற்பொழிவுகள் -மரபு இசை / மக்களிசை, இசைத்தமிழ்
வற்(ர்)மக்கலை இளையோர் கலந்துரையாடல் திரைப்படக் கலைஞர்கள் நிகழ்ச்சி பட்டி மன்றம்
முனைவர்
திரு. ந. சண்முகம்
வற்(ர்)மக்கலை
திரு. ஜெயராமன்
பேராசிரியர்
சிறப்புச் சொற்பொழிவு
திரு. தொ. பரமசிவன்
சிறப்புச் சொற்பொழிவு
திருமதி. நிர்மலா பெரியசாமி
சிறப்புச் சொற்பொழிவு
திரு. கல்யாணி
பேராசிரியர்
சிறப்புச் சொற்பொழிவு
பேரா. இராமசந்திரன்
பட்டிமன்றம்
திருமதி கவிதா
பட்டிமன்றம்
புலவர்
திரு. ராமலிங்கம்
பட்டிமன்றம்
திரு. கே. அண்ணாமலை IPS
சிறப்புச் சொற்பொழிவு
திரு. மாரிமுத்து
மக்களிசை
திரு. சமர்ப்பா குமரன்
இசைத்தமிழ் ஆய்வர்
திரு. இரங்கராஜன் பேச்சிமுத்து
மக்களிசை
திருமதி செல்வி சேகர்
மக்களிசை
திரு. நாகராசு கருப்பையா
மக்களிசை
திரு. செந்தில்
நகைச்சுவை நடிகர்
திரு. யோகி பாபு
நகைச்சுவை நடிகர்
திரு. R J விக்னேஷ்
R J & நகைச்சுவை நடிகர்
திரு. சுட்டி அரவிந்த்
R J & நகைச்சுவை நடிகர்
மூன்றாம்நாள் ஜீலை 5 ஞாயிற்றுக் கிழமை 10:00 am to 5:30 pm ET | 7:00 am to 2:30 pm PT
மரபுக் கலை உலகத் தமிழர்கள் விழிப்புணர்வு மெல்லிசை நிகழ்ச்சி தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் நன்றியுரை
திரு. பம்பை ஆண்டவன்
நாளில் இசைக் கலைஞர்
திரு. முனுசாமி
பெரிய மேளம்
திரு. ஸ்ரீநிவாஸ்
பாடகர்
திருமதி சரண்யா ஸ்ரீநிவாஸ்
பாடகி
திருமதி ப்ரீதா
பாடகி
திரு. தீபக்
பாடகர்
ஸ்ருதி பாலமுரளி
விட்டல் ஹரானா
திரு. ஸ்டீபன் ராப்
Global Tamil Information
Hour Ambassador
இணைய வழியில் நடக்கும் பேரவையின் மூன்று நாட்கள் 2020 தமிழ்விழா
நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்
சுந்தர் குப்புசுவாமி, தலைவர் & பேரவைச் செயற்குழு, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை






## கனடா தமிழ்ச்சங்கம்

# உலகில் முதன் முறையாக 5 மணி நேரத்திற்கும் மேலான 5 மெய்நிகர் நிகழ்ச்சிகள்

நாம் தற்சமயம் சந்தித்து வரும் கொரோனா வைரஸ் காரணமான கடின சூழலை மாற்றி, புத்துணர்வு புகுத்தும் வகையில், சோதனை நிகழ்வாக 5 மணி நேரத்திற்கும் மேலாக மார்ச் 28, 2020 ஆம் நாளன்று மாலை 7:00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 12:30 மணி வரை, ஸ்கேய்ப் மற்றும் யூடியூப் செயலிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட கலைநிகழ்ச்சியில், கனடாவிலிருந்து ராகமாலிகா மற்றும் கனடா தமிழ்ச்சங்கக் குழந்தைகள், நண்பர்கள், இந்தியாவில் இருந்து சன் மற்றும் விஜய் டிவி புகழ் ஆதவன், விஜய் டிவி சூப்பர் சிங்கர்ஸ் கேஷவ் மற்றும் அபர்ணா எனக் கலைஞர்களும், பார்வையாளர்களும் அவரவர் வீட்டிலிருந்தவாறே கலந்து கொண்டது மிகச்சிறப்பு.

இந்த வெற்றியினைத் தொடர்ந்து, மேலும் இரண்டு நேரடி மெய்நிகர் நிகழ்ச்சிகளாக, ஏப்ரல் 4, 2020 ஆம் தேதி 'குடும்ப ஒன்றுகூடல்' நிகழ்ச்சி 5:30 மணி நேரமும், அடுத்து ஏப்ரல் 18, 2020 ஆம் நாளில் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வாக 6:00 மணி நேர நிகழ்வுகளும் நடந்தன. இந்த இரண்டிலும், கனடாவிலிருந்து மருத்துவர்.ரகுராமன், பல் மருத்துவர். சபேசன், ராகமாலிகா, ரேணுகா விக்னேஷ் அவர்களின் கலை அருவி பைன் ஆர்ட்ஸ் மாணவ மாணவிகள், பாடகி சின்மயி மற்றும் கனடா தமிழ்ச்சங்கக் குழந்தைகள், நண்பர்கள், அமெரிக்காவில் இருந்து மருத்துவர்.பழனியப்பன் மாணிக்கம் மற்றும் ஷண்முகப்ரியா், இந்தியாவில் இருந்து பிரபல சித்த மருத்துவர்.சிவராமன், பேச்சாளர், நடிகை.மதுவந்தி, விஜய் டிவி புகழ் நாட்டுப்புற கலைஞர் கோவிந்தராஜ், சன்/விஜய் டிவி புகழ் "அசத்த போவது யார்' கிறிஸ்டோபர் மற்றும் வெங்கடேஷ், பின்னணிப் பாடகர்கள் சுர்முகி, முகேஷ் மற்றும் செந்தில்தாஸ், விஜய் டிவி சூப்பர் சிங்கர்ஸ் ஹரிஹரசுதன், சுதர்ஷன் மற்றும் அபர்ணா, கீபோர்டு கலைஞர் மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சிகளில் சுமார் 250-க்கும் மேலானோர் பங்கு பெற்றதும், 1000-க்கும் மேலான மக்கள் பார்வையிட்டதும் முத்தான மைல்கற்கள் ஆகும்.

ஏப்ரல் 11, 2020 மற்றும் ஏப்ரல் 25, 2020 தேதிகளில் நடந்த இரண்டு மெய்நிகர் குடும்ப ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளில் சுமார் 10 குடும்பங்களுடன் நிகழ்ச்சிகள் நடந்தன. இந்த நிகழ்ச்சிகளில் விஜய் டிவி புகழ் டான்சர் மற்றும் நடிகர் அமுதவாணன் மற்றும் விஜய் டிவி 'கலக்க போவது யாரு'புகழ் பாலா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சிகளில் குழந்தைகளுக்குப் படம் வரையும் போட்டிகளும், கலாச்சாரக் குடும்பப் புகைப்படப் போட்டிகளும் நடந்தன. பங்குபெற்ற குழந்தைகளுக்கு, கனடா தமிழ்ச்சங்க சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. போட்டிகளின் வெற்றியாளர்களை ஓவியர் ஜீவா மற்றும் அழகுக்கலை நிபுணர் மலர் ஆகியோர் தேர்ந்தெடுத்தனர்.

உலகில் முதல் முறையாக தொடர்ந்து ஐந்து மெய்நிகர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்திய கனடா தமிழ்ச்சங்க நிறுவன தம்பதியர்கள் வள்ளிக்கண்ணன் மருதப்பன், பார்வதி வள்ளிக்கண்ணன் மற்றும் தன்னார்வு தொண்டர் களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

1. 'வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்; வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்' – எனும் தொல்காப்பியப் பாடல் கூறும் வாயுறை வாழ்த்தானது, எவற்றைப்போல் முன்னாள் கசந்து பின்னால் நன்மை பயக்கும் வகையில் அமையவேண்டும் என்று கூறுகிறது?

அ) வேம்பு, கடுகு ஆ) வேம்பு, கடுக்காய். இ) வேலம் கடுகு ஈ) வேம்பு, கடுவுப்பு



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America
2020ஆம் ஆண்டுத் தமிழ்விழா
(இணைய வழி)
ஜூலை 4, சனிக்கிழமை
தஞ்சை மாரிமுத்து மக்களிசை குழு
வழங்கும்
திரு. மாரிமுத்து சன்னாசி
மக்களிசை நிகழ்ச்சி
திரு. நாகராசு கருப்பையா
திரு. இரங்கராஜன் பேச்சிமுத்து
திருமதி செல்வி சேகர்
ஒருங்கிணைப்பாளர் திரு. சச்சிதானந்தன் வெங்கடகிருஷ்ணன்
நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க (for links) :
https://fetnaconvention.org/








# நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கம்

மக்கள் சேவையில் எப்பொழுதும் முனைப்புடன் செயல்படுவதில் நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கம் தன் கடமையைத் தவறாமல் செம்மையாக ஆற்றிவருகின்றது. தற்பொழுது, உலகெங்கிலும் பெரும் பேரிடராக இருக்கும் கொரோனா தொற்று நோய் காரணமாக, மக்கள் வீட்டில் அடைந்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய சூழலில், மக்கள் மத்தியில் கொரோனா தொற்று குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில், உணவுக்காக ஏங்கும் பலரது பசியைப் போக்கும் விதமாகவும், நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கம் பல்வேறு நிகழ்ச்சிகளை இணையத்தின் மூலமாக கடந்த சில மாதங்களாக வெற்றிகரமாக நடத்தி வருகின்றது.

மார்ச் மாதம் 8 மற்றும் 15 ஆம் தேதிகளில், கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஆலோசனைக் கூட்டம் தொலைபேசி வழியாக நடத்தப்பட்டது. இதில் தலைசிறந்த மருத்துவர்கள் பங்குகொண்டு, கொரோனா தொற்று நோய் குறித்த தகவல்களையும், பாதுகாப்பு முறைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தனர். மேலும், மக்களின் சந்தேகங்களுக்கு தீர்வையும் வழங்கினர்.

கொரோனா பரவல் காரணமாக, நியூஜெர்சியில் தினசரி வேலை செய்யும் பலருக்கு வேலைக்குச் சென்று பொருளீட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால், பல குடும்பங்கள் உணவுக்காக நியூஜெர்சி கம்யூனிட்டி ஃபுட் பேங்க் என்னும் தொண்டு நிறுவனத்தை நம்பியிருக்கும் சூழல் உருவாகியுள்ளது. அந்த நிறுவனத்திற்கு உதவும் வகையில் நிதி திரட்ட, மாதம் முழுவதும், சனிக்கிழமை தோறும், “இசை கேட்போம்! பசி தீர்ப்போம்!” என்னும் இணைய வழி இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த இசைக் கச்சேரியில், சிறந்த பாடகர்களும், இசைக்கலைஞர்களும் பங்கேற்று, மக்களை மகிழ்வித்தனர். இந்த நிகழ்ச்சியின் மூலம், பதினைந்தாயிரம் ($15,000) டாலர்கள் நன்கொடையாகத் திரட்டப்பட்டது. இந்தத் தொகை முறையாக நியூஜெர்சி கம்யூனிட்டி ஃபுட் பேங்க் தொண்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

அன்னையர் தினத்தை முன்னிட்டு, மே 10 ஆம் தேதி, சிறப்பு நேரலை நிகழ்ச்சியாக, சூப்பர் சிங்கர்ஸ் செந்தில் மற்றும் ராஜலட்சுமியின் மக்களிசை நிகழ்ச்சி இனிதே நடந்தேறியது. கொரோனா பேரிடரால் மக்கள் வீட்டில் அடைந்திருக்கும் வேளையில், அனைவரையும் உற்சாகமூட்டும் வகையிலும், நம்பிக்கை தரும் சூழலை உருவாக்கும் விதமாகவும், நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கம், பல பரிமாணங்களில், தரமான நிகழ்ச்சிகளை தவறாமல் அளித்து, தன் சமுதாயப் பங்கினைச் சீராக செய்து வருகின்றது.

2. ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி என்றும் நீடூழி வாழ்க –

இந்த வாழ்த்தில் ‘அருகு’ என்று குறிப்பிடப்படும் மருத்துவ குணம் நிறைந்த தாவர வகை எது?

அ) புல். ஆ) பூண்டு இ) வேம்பு ஈ) பனை


வசந்த மலர் ஜீலை - 2020
8


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America
2020ஆம் ஆண்டுத் தமிழ்விழா
[இணைய வழி]
ஜூலை 5, ஞாயிற்றுக் கிழமை
மரபிசை
[தவில், பம்பை பெரிய மேளம்]
'பெரிய மேளம்' திரு. முனுசாமி
'தவிலிசைக் கலைஞர்' திரு. ஆண்டவன்
இருவருடைய மங்கல இசை, மரபிசை நிகழ்ச்சிகள்
ஒருங்கிணைப்பாளர்: திரு. திரவியம் சின்னுசாமி
நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க [for links] :
https://fetnaconvention.org/



# தென் ஜெர்சி தமிழ்ச்சங்கம்

தென் ஜெர்சி தமிழ்ச்சங்கம் (SJTA), இக்கடினமான நேரத்தில், அனைவரின் நலன், பாதுகாப்பு மற்றும் சமூக விலகல் விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டி தனது செயல்பாடுகளை மெய்நிகர் நிகழ்வுகளாக மட்டுமே நடத்தி வருகிறது. மார்ச் 18, 2020 அன்று சங்க உறுப்பினர்களான டாக்டர். முத்துமணி (உதவிப் பேராசிரியர் மற்றும் இயக்குனர், வளரும் தொற்றுநோய் தடுப்பூசி மற்றும் நோயெதிர்ப்பு சிகிச்சை மையம்) மற்றும் டாக்டர். ராஜகோபாலன் (நுரையீரல் மற்றும் தீவிர பராமரிப்பு நிபுணர்) அவர்களுடன் கொரோனா வைரஸ் தொற்று குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஏப்ரல் 26, 2020 அன்று சங்கச்செயலாளர் திரு. நரேன் அவர்களால் பள்ளி மாணவர்களுக்கான, 'பைதான் புரோகிராமிங் அறிமுகம்' நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்தேறியது. இவற்றோடு சங்கத்தின் தமிழ் ஆசிரியர்கள் தமிழ் வகுப்புக்களை மெய்நிகர் ஊடக வழியில் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.




# நியூ யார்க் தமிழ்ச்சங்கத்தில் சட்ட வல்லுனருடன் கலந்துரையாடல்

கடந்த ஏப்ரல் 17, 2020 வெள்ளியன்று மாலை 8 மணியளவில், நியூ யார்க் தமிழ்ச்சங்கம் மற்றும் நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கம் இணைந்து வழங்கிய பல்வழி அழைப்பில், சட்ட வல்லுநர் திருமதி. கவிதா ராமசாமி அவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில், நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். கொரோனா (COVID 19) முன்தொற்றியினால் உருவாகியுள்ள சூழலால் பாதிப்புக்குள்ளாகி பல்வேறு விசா பிரிவுகளில் அமெரிக்காவில் இருப்போர்க்கு, அவர்களின் பல்வேறு இன்னல்களையும், அவற்றை எதிர்கொள்ள மேற்கொள்ள வேண்டிய சட்ட வழிமுறைகளையும் தெளிவாகத் தமிழில் விளக்கினார் கவிதா. நிகழ்ச்சியின் இறுதியில், அழைப்பில் பங்குபெற்ற நேயர்களின் வினாக்களுக்கு, பொறுமையுடனும் தெளிவுடனும் விடையிறுத்தார் கவிதா.

# ஹாரிசுபர்க் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

ஹாரிசுபர்க் வட்டாரத் தமிழ்ச்சங்கம் (HATS), இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மேற்கொண்ட நிகழ்ச்சிகளில் முதலாவதாக உள்ளூர் மருத்துவர்களுடன் இனணந்து கொரோனா வைரஸ் (COVID 19) பற்றிய விழிப்புணர்வு மற்றும் இந்நேரத்தில் நாம் பின்பற்றக்கூடிய சுகாதார வழிமுறைகள் குறித்த கலந்துரையாடல், மெய்நிகர் நிகழ்வு மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், இரண்டாவது நிகழ்வாக, 'சுகாதாரப் பணியாளருக்கு உணவளிப்போம்' எனும் நிதி திரட்டும் பிரச்சாரத்தின் மூலமாக பெற்ற $4,300 நிதியைக் கொண்டு உள்ளூர் உணவகங்களுடன் இணைந்து $10-$15 மதிப்புள்ள உணவுப்பொட்டலங்களை PA-மத்தியப் பகுதி மருத்துவ சேவைக் குழுவினருக்கு வழங்கியுள்ளோம்.



3. 'அல்லல் ஒருவர்க்கு அடைந்தக்கால் மற்று அவர்க்கு; நல்ல கிளைகள் எனப்படுவார் நல்ல வினை மரபின் மற்று அதனை நீக்குமதுவே; மனை மரம் ஆய மருந்து – என்ற இலக்கியப் பாடல் குறிப்பிடுவது போல ஒருவர்க்குத் துன்பம் வந்தமையுமானால் அவருக்கு நெருங்கிய உறவு என்று சொல்லப்படுபவர்கள் நல்ல முறையில் அத் துன்பத்தை நீக்க முற்படுவர். அத்தகைய உறவினர் எதற்கு ஒப்பிடப்படுகிறார்?

அ) மன மருந்து ஆ) நல்ல மூலிகை இ) கை மருந்து ஈ) வீட்டு மூலிகை.

# வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்



உலக மக்களை முழுவதுமாக இன்னலில் ஆழ்த்திக்கொண்டிருக்கும் கொரோனாவின் பாதிப்பு காரணமாக, சித்திரைத் திருவிழாவைத் திட்டமிட்டபடி நடத்த இயலாத சூழலில், இணையத்தின் வழியாக பல நிகழ்வுகளை வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்து தமிழர்களுக்கு வழங்கிக் கொண்டு வருகிறது. குறிப்பாக, கொரோனா தீய நுண்தொற்றுக் கிருமியின் பாதிப்பிலிருந்து நம்மைக் காப்பாறிக்கொள்ள வேண்டிய வழிமுறைகளை விளக்கிட, சித்த மருத்துவம், ஆங்கில மருத்துவம், தீய நுண்தொற்று குறித்த ஆய்வுகள் பற்றிய நிகழ்வு போன்றவை குறித்த பல்வேறு இணையவழிக் கூட்டங்கள் நடந்தேறின. ஈரோடு திருமதி. வனிதாமணி வழங்கிய தமிழ்ப்பள்ளிக் குழந்தைகளுக்கான "கதை சொல்லி" நிகழ்ச்சி மற்றும் H1-B "விசா" (VISA) குறித்த சட்ட நிபுணர் கூட்டம், உயில் (Will and Estate planning) எழுதுவது பற்றிய விழிப்புணர்வு கூட்டம், வீட்டுத் தோட்டமிடல் குறித்த நிகழ்ச்சி, குடும்ப வருவாய் திட்டமிடல் நிகழ்ச்சி முதலியனவும் நடந்தேறின. தமிழ்க் குடும்பங்கள் சிரித்து மகிழ மதுரை முத்துவின் நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்றும் நடந்தேறியது. தமிழ்ச்சங்கத்தின் மருத்துவ அவசர உதவிக்குழுவின் வழியாக, தேவைப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. தமிழகத்தில் கொரோனா கிருமியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டுபுறக் கலைஞர்கள், ஏழை எளிய மக்களுக்கு நிதியுதவி வழங்கிட வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையுடன் இணைந்து பணியாற்றிக் கொண்டு உள்ளோம். இந்தக் கொடிய தீய நுண்தொற்றிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள, தொடர்ந்து தமிழ்ச்சங்கம் உடல்/மன நலம் சார் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்திட திட்டமிட்டு உள்ளது.

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது. (குறள்: 102)

என்ற திருக்குறளிற்கேற்ப இயன்ற உதவிகளை வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் செய்து வருகின்றது.

# நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கம்

நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கம் மற்றும் இந்தியா அஸோஸியேஷன்-பாஸ்டன் (IAGB), இரண்டும் இணைந்து இணைய வாயிலாக, ஏப்ரல் 25 சனிக்கிழமையன்று கோவிட்19 பாதிப்புகள் தொடர்பான கருத்தரங்கினை நடத்தியது. இந்த எதிர்பாராத வைரஸ் தொற்று சூழ்நிலையில் நமது "நுழைவு" ஆணை (விசா, H1-B, H4, EAD, L, etc ..) குறித்த சந்தேகங்கள் மற்றும் அனுதினம் மாறும் அமெரிக்கா மற்றும் இந்திய அரசின் முடிவுகளின் பாதிப்புகளையும் பற்றி விவாதித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வின் கேள்வி பதில் நேரத்தில் பல வினாக்களும், ஐயங்களும் அதற்கான விவரங்களும் பேசப்பட்டன. கோவிட் நிலைமை மாற்றத்திற்கு பிறகு NETSஸின் கோடை விழா மற்றும் குழந்தைகள் விழாக்களை ஏற்பாடு செய்ய முடியும் என்று நம்புகிறோம்.




4. அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது; மருந்தாய்ந்து கொடுத்த__________ எனும் நற்றிணை பாடலில், நற்றங்கொற்றனார், தீர்த்தற்கரிய நோயை அடைந்தவர்க்கு அவர் விரும்பியதைக் கொடுக்காது ஆராய்ந்து, அந் நோய்க்குத் தக்க மருந்து கொடுப்பவரை எவ்வாறு அழைக்கிறார்?

அ) பெருந்தகை ஆ) சான்றோன் இ) மருந்தாளன் ஈ) அறவோன்.






# கனடியத் தமிழர் பேரவை – ரொறன்ரோ

கோவிட்-19 (கொரோனா) தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதையடுத்து, இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வட கிழக்கிலுள்ள, அன்றாட உழைப்பின் வருமானத்தில் வாழ்கின்ற மக்களின் உணவுப் பற்றாக்குறை, பட்டினி மற்றும் போசாக்கின்மையைத் தவிர்க்கும் முகமாக கனடியத் தமிழர் பேரவை, சுமார் 2000-கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒருவாரத்துக்குப் போதுமான உலர் உணவுப் பொதிகளை ஏப்ரல் மாதத்தில் வழங்கியுள்ளது. மேலும் மே மாதத்தில் எவ்வுதவியும் இதுவரை வழங்கப்படாத குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மனிதாபிமான செயற் திட்டத்தில் கனடியத் தமிழர் பேரவை பல்வேறு புலம்பெயர் தமிழ் உறவுகள், கொடையாளர்கள் வர்த்தகப் பெருமக்கள், மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை ஒன்றிணைத்து வடகிழக்குப் பொருளாதார அபிவிருத்தி நடுவகத்தினூடாகச் (www.needcentre.org) செயற்படுத்தி வருகின்றது. மேலும் கனடாவில் அர்ப்பணிப்புடன் பணிபுரியும் சுகாதார ஊழியர்களை ஆதரித்து, மார்க்கம் ஸ்ரோவில் மருத்துவமனைக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நிதி சேகரிப்பு முயற்சியை கனடியத் தமிழர் பேரவை ஆரம்பித்துள்ளது. இவற்றோடு தமிழர்கள் அதிகம் பலனடைவதுடன், தொழில் புரியும் ஸ்கார்பாரோ மருத்துவமனை ஊழியர்களின் தன்னலமற்ற சேவையை ஆதரிக்கும் முகமாக ஊட்டச்சத்து பார்கள் (nutrition bars) மற்றும் சிற்றுண்டிகள் ஏப்ரல் 23, 2020 அன்று கனடியத் தமிழர் பேரவையினால் வழங்கப்பட்டன.






# நியூயார்க் ஆல்பனி தமிழ்ச்சங்கத்தின் மெய்நிகர் கலாட்டா நிகழ்வுகள்

நியூயார்க் ஆல்பனி தமிழ்ச்சங்கம் கடந்த இரண்டு மாதங்களாக ‘குவாரண்டைன் கலாட்டா (Quarantine Galatta)’ என்ற தலைப்புடன் தொடர் நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடத்தியது. முதலாவதாக “பாட்டு பாடவா” நிகழ்ச்சி ஏப்ரல் 12 ஆம் நாளில் நடைபெற்றது. இரண்டாவதாக “மழலைப் பட்டாளங்கள் – ஆல்பனியின் செல்லப் பேச்சாளர்களுக்கான தேடல்” நிகழ்வு ஏப்ரல் 25 அன்று அட்டகாசமாக அரங்கேறியது! மூன்றாவதாக “மகளிர் சிறப்பு (சிரிப்பு) பட்டிமன்றம் “ மிகவும் விமரிசையாக மே 3 ஆம் நாளன்று நடைபெற்றது. நான்காவதாக “அன்பென்றாலே அம்மா” அன்னையர் தின சிறப்பு நிகழ்ச்சி மே 10 ஆம் நாளில் மிகவும் அற்புதமாக காண்போர் உள்ளங்களையும் உணர்ச்சிகளையும் கொள்ளை கொண்டது. ஐந்தாவது நிகழ்ச்சியாக “இளைய கீதம்” மே 24 அன்று அமர்க்களமாக நடைபெற்றது.

5. நோயாளிக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர், தன்னையே நோயாளியாகப் பாவித்துச் சிகிச்சையளிக்க வேண்டுமென்று கூறும் ‘பிறர் நோயும் தம்நோய் போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்’ என்ற பாடல் இடம்பெறும் நூல் எது?

அ) திரிகடுகம் ஆ) மலைபடுகடாம் இ) கலித்தொகை. ஈ) சிலப்பதிகாரம்




# சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம்




சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் கொரோனா வைரஸ் தொற்று காரணத்தால் எப்போதும் நடத்தும் சில நிகழ்வுகளை நிறுத்தி வைத்துள்ளது. ஆனால் நம் மக்கள் மனதில் எழும்பிய வினாக்களுக்கு விடை அளிக்கும் வகையில் முகநூல் வழியாக, மார்ச் 19 ஆம் தேதி,சங்கத்தின் உறுப்பினர் ஷீலா ரமணன், டாக்டர் திரு. வெங்கட் ஸ்ரீனிவாசனுடன் ஓர் மருத்துவ கலந்துரையாடல் நடத்தினார். சமூக இடைவெளி கருதி சங்கத்தின் தலைவர், துணைத்தலைவர், செயலாளர் மட்டுமே கலந்துகொண்டனர்.

ஏப்ரல் 14 தமிழ் வருடப்பிறப்பு அன்று தமிழ்ச்சங்கத்தின் மலரான 'மல்லிகை' மலர், மூன்றாம் ஆண்டின் முதல் இதழாக வெளியிடப்பட்டது. இம்மலர் வருடத்திற்கு மூன்று முறை வெளிவரும் இந்த மலர், சான் ஆண்டோனியோ தமிழ் மக்களின் திறமைகளை வெளிக்கொணரவே ஆரம்பிக்கப்பட்டது. கதைகள், கவிதைகள், சிறந்த புகைப்படங்கள், பயணக் கட்டுரைகள், தமிழ்ச்சங்கத்தில் ஒவ்வொரு நான்கு மாதத்தில் நடக்கும் நிகழ்வுகள், சமையல் குறிப்புகள் என ஜனரஞ்சகமான ஓர் இதழ் 'மல்லிகை'. ஓவியங்கள் வரைந்து குழந்தைகளும் இதில் பங்கு கொள்கிறார்கள். ஒவ்வொரு இதழிலும் மருத்துவர்களின் பங்களிப்பும் உண்டு.

# தமிழ் மக்கள் மன்றம் – நியூ ஹாம்ப்ஷயர்




தமிழ் மக்கள் மன்றத்தின் இளைஞர் பிரிவு , வீ கேர் (we Care charity) அறக்கட்டளையின் உணவுக் கிடங்கிற்கு, நன்கொடை வழங்கியது. இந்தக் குழுவில் 6 முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் 26 இளைய தலைமுறையினர் உள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளாக, தேங்ஸ் கிவிங் டே,கிறிஸ்துமஸ் உள்ளிட்ட அனைத்து விடுமுறை நாட்களிலும் அத்தியாவசியப் பொருட்களை அவர்கள் சேகரித்தனர். கோவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிட, வீ கேர் அறக்கட்டளைக்கு, விலையில்லாப் பொருட்களைச் சேகரித்து வழங்கினர். இந்தக் குழுவின் அனைத்துக் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கும் தமிழ் மக்கள் மன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், இந்த கோவிட்-19 நெருக்கடி காலத்தில், 10 வாரங்களில் 2000 பேருக்கு உணவு வழங்கிட, நமது மன்றம், நியூ இங்கிலாந்து பகுதியிலுள்ள 'தர்மா சென்டர் ஆப் அமெரிக்கா' (DCA) உடன் இணைந்து உதவியதுடன் $ 500 நன்கொடையும் அளித்தது. மேலும், நாஷுவா சூப் சமையலறைக்கு $ 250 உதவித்தொகையும் வழங்கியது.

6. இப்போது பரவி வரும் கரொனா உயிர்க்கொல்லி நோயினை எதிர்கொள்ள, வலுவான நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்படும் அதே கருத்தினைக் கூறும் 'திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்து போல் மருந்தாகி மனன் உவப்ப' என்ற பாடலாக்கொண்ட நூல் ?

அ) திரிகடுகம் ஆ) சிறுபஞ்சமூலம் இ) ஏலாதி ஈ) கலித்தொகை.

# கன்சாஸ் நகரத் தமிழ்ச்சங்கம் – கொரோனோ நிதி உதவி

கொரோனோ உயிர்க்கொல்லி தாக்கத்தால் பாதிப்படைந்துள்ள அமெரிக்கா மற்றும் இந்திய நாடுகளில், வாழ்வாதாரத்தை இழந்து வாடும் மக்களுக்காக, கன்சாஸ் நகரத் தமிழ்ச்சங்கம், அமெரிக்க நாணய மதிப்பில், 4500 டாலர்கள் வசூலித்து, ரியாக்ஷன் என்ற தன்னார்வ அமைப்பின் வழியாக உதவியது. இதற்கு நன்கொடை வழங்கிய நல்ல உள்ளங்கள் அனைவருக்கும் கன்சாஸ் தமிழ்ச்சங்கம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.




# மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் மெய்நிகர் நிகழ்வுகள்

மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் சித்திரை விழா, கொரோனா நுண்ணுயிர் தொற்றுக் காலகட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சமூக விலகலால் நடைபெறவில்லை. இந்தக் காலகட்டத்தில் கொரோனா நுண்ணுயிர் தொற்று பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மார்ச் 23 ஆம் நாள் இணையதள கலந்தாய்வு, தமிழ்ச்சங்கத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. நுண்ணுயிர்த் தொற்றுப் பிரிவில் முனைவர் பட்டம் பெற்ற திருமதி கவிதா தமால் அவர்கள், தமிழ்ச்சங்க உறுப்பினர்களிடம் கலந்துரையாடி அவர்களின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். இந்தத் தொற்றுக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விதமாக, தமிழ்ச்சங்க உறுப்பினர்களிடையே நிவாரண நிதி திரட்டப்பட்டது. பெறப்பட்ட நிதியை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் உதவி தேவைப்படும் மக்களுக்கு பகிர்ந்தளிக்க மிசௌரி தமிழ்ச்சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. பதினோரு ஆண்டுகளுக்கு முன்பாக 2009-ல் தமிழீழத்தில் கொன்றொழிக்கப்பட்ட நம் தமிழ் உறவுகளின் பதினோராம் ஆண்டு இனப்படுகொலையை நினைவு கூறும் விதமாக மே மாதம் பதினெட்டாம் தேதி தமிழ்ச்சங்கம் சார்பாக இனப்படுகொலை நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது.







7. ‘உற்ற சுரத்துக்கும் உறுதியாம் வாய்வுக்கும் அற்றே வருமட்டும் அன்னத்தைக் காட்டாதே’ – என முறையான பட்டினி நல்லது என்ற கருத்தைக் கூறியவர்?

அ) திருமூலர். ஆ) அகத்தியர் இ) தேரையர் ஈ) கடுவெளிச் சித்தர்







# ஜாக்சன்வில் தமிழ் மன்றம் – மெய்நிகர் வழியில் பல நிகழ்ச்சிகள்

இந்தக் கொடிய கொரோனா தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பது நம்மை பெரும் பயத்தில் ஆழ்த்துகின்றது. நாம் அனைவரும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் வீட்டிலேயே இருக்கவேண்டிய கட்டாயம் நீள்கின்றது. இந்த அசாதாரண சூழ்நிலையில், ஜாக்சன்வில் தமிழ் மக்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தும் விதமாக ஜாக்சன்வில் தமிழ் மன்ற செயற்குழு 2020, மெய்நிகர் வழியில் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகின்றது. இதன் தொடக்கமாக “லாக்டவுன் அலப்பறைகள்” என்னும் தலைப்பில் நமது ஜேக்ஸ் தமிழ் மங்கைகள் மற்றும் ஜேக்ஸ் தமிழ் ஆடவர்களின் துணைகொண்டு, மே மாதம் 9 ஆம் தேதி சனிக்கிழமையன்று “லாக்டவுனால் அதிகம் அல்லல்படுவது ஆண்களா? அல்லது பெண்களா?” என்ற சுவாரசியமான பேச்சரங்கம் ஒன்று ஒளிப்பரப்பப்பட்டது.ஜாக்சன்வில் தமிழ் மன்றத்தில் முதன்முறையாக மெய்நிகர் வழியில் நடந்த இப்பேச்சரங்கம் மக்களின் பெரும் ஆதரவை பெற்றது எங்களுக்கு மட்டற்ற மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்தது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற 10 திறம்மிகு பங்கேற்பாளர்களுக்கும், நடுவர் முனைவர் திருமதி. கண்ணமங்கை அவர்களுக்கும், மேலும் இந்நிகழ்ச்சியை மாபெரும் வெற்றியடையச் செய்த அனைவருக்கும் ஜாக்சன்வில் தமிழ் மன்ற செயற்குழு 2020 சார்பில் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை இதுவரை 1900-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் காணொளி மூலமாக கண்டு களித்துள்ளனர் என்பதில் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! அடுத்ததாக, மே மாதம் 10ஆம் தேதி, அன்னையர் தினத்தை முன்னிட்டு தந்தையர் அனைவரும் தங்கள் நளபாகத்தை தங்கள் குடும்பத்துக்குக் காண்பித்து இன்புறும் வகையில் ஆடவர் சமையல் சவால்’ என்று ஒரு நிகழ்ச்சியை ஜா. த. ம. செயற்குழு 2020 ஏற்பாடு செய்து அனைத்து அன்னையரின் உள்ளத்திலும் நீங்கா இடம் பிடித்தது. இதில் முப்பதுக்கும் மேற்பட்ட அறுசுவை உணவு வகைகளை சங்கத்தின் ஆடவர் ஆசையுடன் தயார் செய்து அதனை அழகாக படமெடுத்து அனுப்பியிருந்தனர்.

இந்த மெய்நிகர் நிகழ்வுகளின் தொடர்ச்சியாக, வரும் ஜூன் 20 ஆம் தேதி தந்தையர் தினத்தை முன்னிட்டு அனைத்து தந்தையர் களையும் மகிழ்விக்கும் விதமாக ‘ஆல் இன் ஆல் அழகு ராஜா’ எனும் தலைப்பில் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ஜா. த. ம. செயற்குழு வெகு விமரிசையாக ஏற்பாடு செய்துவருகின்றது. அந்த நிகழ்வு குறித்த விரிவான செய்திகளை அடுத்த அருவி இதழில் காணலாம்.

# ராச்சஸ்டர் வட்டாரத் தமிழர் அமைப்பு

கொரோனா தொற்று பேரிடரில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவும் பொருட்டு, ராச்சஸ்டர் வட்டாரத் தமிழர் அமைப்பு ஒரு சிறிய தொகையினை இங்குள்ள நண்பர்களிடம் பெற்று இந்தியாவிலுள்ள ரியாக்சன் பொதுச்சேவை குழுவிற்கும், விகடன் பேரிடர் மீட்புக் குழுவிற்கும் பங்கிட்டு அனுப்பிவைத்தோம். இக்கட்டான ஒரு தருணத்தில் நம்மாலியன்ற உதவியினை நல்கியதில் அமைப்பு மகிழ்ச்சியடைகிறது.






8. காயப்பட்ட புண்ணைப் பருத்திப் பஞ்சால் துடைத்து, புண் மேல் கட்டுப்போடும் பழக்கத்தை உலகிலேயே முதன் முதலாகப் பயன் படுத்த ஆரம்பித்த இனம் தமிழினம் தான் என்ற கருத்தைக் கூறும் “கதுவாய்ப் போகிய துதிவாய் எஃகமொடு பஞ்சியும் களையாப் புண்ணர்” என்று பாடும் நூல்?

அ) அகநானூறு ஆ) ஏலாதி இ) திரிகடுகம் ஈ) புறநானூறு.





# அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கத்தின் சமூகசேவை

ஆர்கன்சாஸ் தமிழ்ச்சங்கத்தின் அனைத்துப் பொதுகூடுகை நிகழ்ச்சிகளும், கொரோனா என்ற கொடிய வைரஸ் தாக்கம் காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த தமிழ்ப் புத்தாண்டு விழாவும் ரத்து செய்யப்பட்டது. சமூக விலகல் காரணமாகத் தமிழ்க் கல்வி, இணையதளம் வழியாகக் கற்பிக்கப்படுகிறது. தமிழ்ச்சங்கம் சார்பில் உணவு மற்றும் உறைவிடம் இன்றி துன்புறும் மக்களுக்கு ஜெரிக்கோ எனும் சமூக சேவை நிறுவனம் மூலம் உணவு வழங்கப்பட்டது. மருத்துவ உதவி அமைப்புகளுக்குத் தேவையான கையுறைகள் மற்றும் முகக்கவசங்கள் வழங்கப்பட்டன. மேலும், கொரோனா வைரஸ் பாதிப்புப் பற்றியும் இந்தக் காலங்களில் எப்படிச் சூழ்நிலைகளைக் கையாள்வது என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பல்வழி அழைப்பு மூலம் நடத்தப்பட்டன.








# மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம்

மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம், கொரோனா தடுப்பில் முன்னணியிலிருந்து செயல்படுபவர்கள் மற்றும் அவசரகாலப் பணியாளர்களுக்கு மதிய உணவு வழங்கிட நிதி திரட்டலை நடத்தியது. தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், நிதி திரட்டும் பிரச்சாரத்தில் ஆர்வமுடன் பெருமளவில் பங்கேற்றனர். கொரோனாவைக் கட்டுப்படுத்த உதவிடும் இந்தத் தன்னலமற்ற வீரர்களுக்கு சூடான மற்றும் சுவையான தென்னிந்திய மதிய உணவை வழங்க முடிந்தது. மேலும், கோவிட்-19 தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிக்கும் வகையில் சங்க உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்கள் மூலமாக பல பயனுள்ள விவரங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

9. போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்ற வெள்ளி ஊசி கொண்டு தையல் போடுவதைப் பார்ப்பதற்கு மீனைக் கொத்திக் கொண்டு நீரில் இருந்து எழும் சிரல் என்ற மீன்கொத்திபோல இருக்கும் என்பதை “மீன்தேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச் சிரல்-பெயர்ந் தன்ன நெடுவெள்சி” என்று கூறும் நூல் எது?

அ) புறநானூறு ஆ) பத்துப்பாட்டு இ) எட்டுத்தொகை ஈ) பதிற்றுப்பத்து.



# அட்லாண்டா மாநகர தமிழ்ச்சங்கம்

அட்லாண்டா மாநகர தமிழ்ச்சங்கம், "தமிழே! அமுதே!" என்ற நிகழ்ச்சியின் வாயிலாக வாரந்தோறும் சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு ஒருவர், தான் படித்த புத்தகத்தின் சாரத்தைச் சங்கத்தினரிடம் பகிர்ந்து கொள்கின்றனர் . இதன் மூலம் தமிழ் நூல்களைப் படிக்கும் ஆர்வமும், படிக்கும் பழக்கமும் மிகுதி அடைகின்றது. இந்த நிகழ்வின் உச்சமாகக் கடந்த வாரம் சனிக்கிழமை, சிறார்களின் சிறப்பு வாரமாக இருந்தது. இதில் 7 குழந்தைகள் புத்தகம் படித்துப் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சி முழுவதையும் இளைய தலைமுறை மாணவர்களே வழி நடத்தினர்.

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் குழந்தைகளுக்காக, திருக்குறள் நேரத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். குழந்தைகள், திருக்குறளுடன் அதன் பொருளைக் கூறும் காணொளி, அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கத்தின் முகநூல் மற்றும் வலையொளியில் ஒரு நாளைக்கு இரண்டு முறை பகிரப்படுகின்றது. இதில் குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். "கதை கேட்கலாம் வாங்க" என்ற நிகழ்ச்சியும் அட்லாண்டா தமிழ்ச்சங்கத்தினரால் நடத்தப்படுகின்றது, இதில் சிறுவர் முதல் பெரியவர் வரை தங்களுடைய தமிழ்க் கதைகளைக் கூறி காணொளி அனுப்ப அது அதற்குத் தகுந்த படங்களுடன் மிக அழகாகத் தொகுக்கப்பட்டு புதன் மற்றும் ஞாயிறு தோறும் வெளிவருகின்றது. இது அனைவரின் மொழி ஆர்வத்தை தூண்டுவதோடு சிறார்கள் தமிழ் மொழியில் சிறந்து விளங்கவும் உதவுகின்றது. மேலும் அன்னையர் தின விழாவை இந்த கோவிட் –19 நேரத்தில் நிகழ்வுநிரல் வழியாக அட்லாண்டா தமிழ்ச்சங்கம் நடத்திய விதம் ஒட்டுமொத்த உலகத் தமிழரையும் வியக்க வைத்ததென்று சொன்னால் அது மிகையாகாது. 8 நாட்கள் நடந்த அந்த நிகழ்வின் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்த, மேலும் தன்னார்வத் தொண்டு புரியும் அனைத்து மகளிரும் அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர். சித்திரை மாதத்தில் நடந்த இந்த விழா, நம்ம ஊரில் நடக்கும் சித்திரைத் திரு விழாவிற்கு நிகராகக் கொண்டாடப்பட்டு மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றது. பேரிடர் நேரத்தில் மக்கள் கலங்காமல் இருக்க என்ன என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அனைத்தையுமே அட்லாண்டாத் தமிழ்ச்சங்கம், தலைவர் திரு ஜெயசாரதி, 2020 ஆண்டு தமிழ்ச்சங்கக் குழுவினர், மற்றும் தன்னார்வலர்கள் தமிழ் மக்களுக்காகச் செய்து தமிழரின் அறத்தைப் பேணிக் காக்கின்றனர்.

கொரோனாவின் தாக்கத்தால் பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களின் நலனுக்காக நிதி திரட்டும் நோக்கில், நமது சங்கத்தின் தன்னார்வலர்கள், திரையுலகப் பின்னணிப் பாடகர்கள் சுர்முகி மற்றும் முகேஷ் இவர்களுடன் இணைந்து வலையொளி மூலம் இன்னிசை நிகழ்ச்சியை நடத்தினர். இதோடு முன்னணியில் நின்று தன்னலமின்றிச் சேவை புரிவோர், மற்றும் அட்லாண்டாவில் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கும் மக்களுக்கு நமது சங்கத்தின் அறப்பணிக் குழுவினர் பல வகைகளில் உதவி வருகின்றனர். ஜியார்ஜியாவின் பல்வேறு சேவை அமைப்புகளுடன் இணைந்து, உணவு, மளிகை மற்றும் சுகாதாரப் பொருட்களையும் வழங்கி வருகின்றனர்.

## தமிழ் சிநேகம் - தாம்பா, ப்ளோரிடா

அயல் மண்ணில் வாழ்ந்தாலும், தமிழ் மொழியை நமது அடுத்த தலைமுறையும் பேச வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் தமிழ் சிநேகம் ஆரம்பித்த 'சிநேகம் தமிழ்ப் பாடசாலை', தனது மூன்றாவது ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்தது. சமூகத் தனிமை மற்றும் சமூக விலகலைக் கருத்தில் கொண்டு, 'சிநேகம் தமிழ்ப் பாடசாலை', தமிழ்ப் பாடங்களை தடங்கலின்றி இணையம் வழியாக நடத்தி, பள்ளி இறுதியாண்டுத் தேர்வையும் நிறைவு செய்தது. 110 மாணவ மாணவியர்கள் ஒவ்வொரு வாரமும் பயிற்சியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, விடாது தமிழ் கற்றுக் கொண்டு பட்டம் பெற்றனர்.




10. "கைகாலு வீக்கத்துக்கு - கண்ணே உனக்கு; கணை எண்ணெய் வாங்கித்தாரேன் மலை போல வந்தாலும் - கண்மணியே; பனிபோல விலகிடும்மா" என்ற நாட்டுபுறப்பாடல் குறிப்பிடும், சோகை, காமாலை போன்ற நோய்களைத் தீர்க்கப் பயன்படும் கணை எண்ணையின் பகுதிப் பொருட்கள் என்னென்ன?

அ) வசம்பு, மூக்கிரட்டை வேர், ஆமணக்கெண்ணை ஆ) சுக்கு, மிளகு, விளக்கெண்ணை இ) மிளகு,திப்பிலி , வேம்பெண்ணை

ஈ) இஞ்சி, மிளகு, எள்ளெண்ணை.







# மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம்

டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம் கொரோனாவிற்காக ஊரடங்கிய வேளையிலும், நமது தமிழ் மக்களுக்கான சங்கப்பணிகளை நவீன ஊடக வசதிகளின் மூலம் தொடர்ந்து நடத்தி வருகிறது.

கொரோனா குறித்த விழிப்புணர்வை நகைச்சுவைபட மருத்துவர் திரு. பழனியப்பன் மாணிக்கம் MD, MPH (Epidemiology) அவர்கள் மார்ச் 15, 2020 அன்று டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கத்தின் முகநூல் நேரலையில் மிக முக்கியமான தகவல்களைப் பகிர்ந்துகொண்டார். இந்நிகழ்ச்சியை நமது வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளர் திருமதி. உண்ணா தொகுத்து வழங்கினார்.

மார்ச் 22, 2020 அன்று, அமெரிக்க குடிவரவு வழக்கறிஞர்கள் (Immigration Experts) மரியாதைக்குரிய கவிதா ராமசாமி மற்றும் மேரி கென்னடி அவர்கள் விசா நடைமுறைகள், வெளிநாட்டு பயணத்திட்டமிடல்கள் மற்றும் பல குடிவரவு குறித்த தகவல்களை, டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கத்தின் முகநூல் நேரலையில் பகிர்ந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியை திரு. கார்த்திக் ரங்கராஜன் ஒருங்கிணைத்தும், நமது வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளர் திருமதி. சுமி தொகுத்தும் வழங்கினர்.

ஏப்ரல் 5, 2020 அன்று, டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கத்தின் முகநூல் நேரலையில், அமெரிக்கவாழ் இந்தியச் சமூகத்திற்காக, பல தமிழ்ச்சங்கங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து "நிதி மற்றும் வருமானவரித் திட்டங்கள்" (Finance & Tax Planning Session) கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் வேலைவாய்ப்பு, தற்காலிக / நிரந்தர வேலைவாய்ப்பின் மந்த நிலை மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான திட்டங்கள், வேலையிழந்தோருக்கான அனுகூலங்கள், கல்விக்கடன், வணிக உரிமையாளர்களின் நிலை மற்றும் பல தலைப்புகளில் திரு. தமிழ்வாணன் திரு. ஆனந்த் பழனிச்சாமி, திரு. துப்பில் நரசிம்மன் மற்றும் திரு. அருண் குமார் ஆகியோர் உரையாற்றினார்கள். அதே நாளில், அமெரிக்கத் தமிழ் மருத்துவக் கழகம் (ATMA), மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம் மற்றும் கோவிட்-19 தமிழ்ப் பணிக் குழு இணைந்து கொரோனா வைரஸ் விழிப்புணர்வு குறித்து பல்வழித் தொலைபேசி அழைப்பில், பொதுமக்களின் கேள்விகளுக்கு மருத்துவர் தீப்தா நெடுஞ்செழியன் M.D., F.A.C.P, மருத்துவர் கலாவள்ளி இசக்கியல் M.D, மருத்துவர் அன்பு முத்துசாமி M.D, மருத்துவர் கலைச் செல்லம் M.D மற்றும் மருத்துவர் சரஸ்வதி முப்பண்ணா M.D விடையளித்து விழிப்புணர்வு பெறச் செய்தனர். ஏப்ரல் 12, 2020 அன்று, டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கத்தின் முகநூல் நேரலையில் "கோவிட்-19 பயத்தினால் வரும் விளைவுகளும் அதற்கான தீர்வுகளும்" என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. ரவீந்திரன் கண்ணன் சிறப்புரையாற்றியும், பார்வையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறியும் சிறப்புச் செய்தார். இந்நிகழ்ச்சியை திருமதி. கோமதி பெரியதிருவுடி ஒருங்கிணைத்தும், நமது வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளர் திரு. சக்தி தொகுத்தும் வழங்கினர்.

தாயகம் சென்று இந்த கொரோனா தாக்குதல் காலத்தில் அமெரிக்கா திரும்பிய திரு. கால்டுவெல் மற்றும் அருண்குமார் பொன்னுசாமி இருவரும் தங்களது பயண அனுபவத்தை, ஏப்ரல் 24, 2020 அன்று, டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கத்தின் முகநூல் நேரலையில் பகிர்ந்துகொண்டதுடன், இச்சூழலில் யாரேனும் சிக்கியிருந்தால் அமெரிக்கா திரும்ப என்ன வழிமுறைகள் என்பதனையும் பொதுமக்களுக்கு விளக்கிக்கூறினர். இக்கொரோனா காலக்கட்டத்தில், நோய் பாதிக்கப்பட்டோரையும் பொதுமக்களையும் உரிய முறையில் கவனித்து, வழிநடத்தி, சுகாதாரம் பேணி, காத்து வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள், காவலர்கள் மற்றும் தன்னார்வலர்களை டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம், நேரடியாகச் சந்தித்தும், தமது ஊடகங்களான வானொலி மற்றும் முகநூல் நேரலைகளிலும் அவர்களை அழைத்துப் பாராட்டியும் கவுரவித்தது. இவர்களில் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த திருமதி. காயத்ரி தேவராஜ் மற்றும் திருமதி. ஜூவெள்ளி டெனி ஆகியோரும் அடங்குவர். பல்வேறு தருணங்களில் நன்கொடைகள் வசூலிக்கப்பட்டு உரியோருக்கு அளித்து கவுரவிக்கப்பட்டது. "விலகியிரு விழித்திரு டாலஸ்" எனும் தலைப்பில் செல்வன் நந்தன் சவடா மற்றும் பல குழந்தைகளின் மூலம் விழிப்புணர்வு காணொளிகள் வெளியிடப்பட்டது.

11. காலையில் இஞ்சியையும், கடும் பகல் சுக்கினையும் ; மாலையில் கடுக்காயையும் மண்டலம் தின்று வந்தால், கோலை ஊன்றி நடப்பவரின் குறுகிப்போன உடலதுவும் வீசியெறிந்துவிட்டு குதூகலமாய் நடந்திடுமே - என்ற பாடலில் குறிப்பிடப்படும் மண்டலம் என்பது எத்தனை நாட்களென பொதுவாகக் கருதப்படுகிறது?


அ) 42 ஆ) 45 இ) 46 ஈ) 48.




## சியாட்டில் தமிழ்ச்சங்கம்

ஒவ்வொரு ஆண்டும், சித்திரை மாதத்தில், நம் சியாட்டில் தமிழ்ச்சொந்தங்களுக்கு வாழை இலையில் உணவு பரிமாறி மகிழும் சியாட்டில் தமிழ்ச்சங்கம், இந்த வருடம் உணவு இல்லாமல் தவிக்கும் மக்களுக்கும், நம்மைக் காக்க இரவு பகலாகப் போராடிக் கொண்டிருக்கும் மருத்துவக் குழு மற்றும் முதல்நிலை மீட்புப் பொறுப்பாளர்களுக்கும் நன்றி சொல்லும் வகையில், ஒரு நாள் மதிய உணவு வழங்கி, இந்தக் கொரோனா பேரிடருக்கு உதவிக்கரம் அளிக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், முதல் கட்ட நிவாரணமாக $7500 வரை வாஷிங்டன் மாநிலத்திற்கு கொரோனா நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.




## சார்லட் தமிழ்ச்சங்கம்

யார் கண் பட்டது நம் மேல்? இப்படி ஒரு தாக்கம்! எல்லாம் விரைவில் நலம்பெறும் என்று நம்புவோம். மக்களின் நலன் கருதி சார்லட் தமிழ்ச்சங்கம் நம் மருத்துவர் குழுவின் துணை கொண்டு, ஏப்ரல் 5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று “கொரோனா தொற்று நோயைக் கையாளும் முறை” என்ற விழிப்புணர்வுக் கலந்துரையாடலை தொலைபேசி வாயிலாக நடத்தியது. மருத்துவர்கள் திரு. தணிகையரசு தியாகராஜன் MD,திரு. நரசிம்மன் கனகசபை MD, திருமதி. குமாரி ரமேஷ் MD, மற்றும் திருமதி. கல்பனா ஷண்முகம் MD ஆகியோர் கலந்து கொண்டு சங்க உறுப்பினர்களின் கேள்விகளுக்கு, அனைவருக்கும் புரியும் விதமாக பொறுமையாக விளக்கம் கூறினார்கள். மருத்துவர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

12. நாட்டு வைத்தியம், வீட்டு வைத்தியம் - சித்தவைத்தியம்; மொகலாயர் - யூனானி வைத்தியம்;

ஆங்கிலேயர் - அலோபதி; ஜப்பான் - ஹோமியோபதி - இந்தப் பொருத்தங்களில் உள்ள தவறு என்ன?



# கடலோரக் கண்மணியின் கண்ணீர் கவிதை

பல் துலக்கவில்லை
பழைய துணி மாற்றவில்லை
பலமணி நேரப் பயணத்தின்
வாடை கூடப் போகவில்லை
வாசலில் கண்டதும்
வாரி அணைப்பாயே அம்மா!

நாலு வயது பெரியவனோ
நாலு வயது சின்னவனோ
விமானநிலைய வாசலில்
மணிக்கணக்கில் கால்வலி தெரியாமல்
காத்திருப்பாயே சகோதரா!

பெற்ற மகள் பேரெடுத்து வாழும்
பேருவுவகையில் வரவேற்க தெரு இறங்கி
பெருமையுடன் நிற்பீரே அப்பா!

ஊரே தொட மறுக்கும்
வியாதியே வந்தாலும் தொட்டுத் துடைத்து
மடி சாய்ப்பாயே உறவே!

இன்று நம் அண்டத்தில் உயிர்க்கொல்லி!
கொத்துக் கொத்தாய் செத்து மடியும் செய்தி!
மரணபயம் அளிக்க -உன்னை
மனம் அண்டுகிறதே அன்பே!

வரவேற்க உன் கை நீண்டாலும்
அருகில் வர இயலவில்லையே அம்மா!
விதி விட்ட வழி என
கை விட்டதே இவ்வுலகம்!
கலங்கினாலும் கண்ணீர் விட்டாலும்
கட்டி அணைக்க இயலவில்லையே!

அக்கரையில் நீ!
இக்கரையில் நான்!

**-ஷீலா ரமணன்**
சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம்.

13. அண்டத்திலுள்ளதே பிண்டம், பிண்டத்திலுள்ளதே அண்டம், அண்டமும் பிண்டமு மொன்றே, அறிந்து தான் பார்க்கும் போதே - என, மனித உடலானது பிரபஞ்சத்தில் ஒரு பிரபஞ்சமே என்ற கருத்தினைக் கூறிய சித்தர் யார்?

அ) போகர் ஆ) குதம்பைச்சித்தர் இ) தேரையர் ஈ) திருமூலர்.





# பாரதி கலை மன்றம்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற முதுமொழியைப் புரட்டிப் போட்டுவிட்டு, ஆளுக்கொரு கோடியில் என்று அடைத்து வைத்து விட்ட கொரோனா உள்ளடைப்பு நேரத்தில், உள்ளம் தளராது தம்மைத் தாண்டி சமூகத்தின் தேவையைப் பார்க்கத் தன் பார்வையை திருப்பியது ஹூஸ்டன் பாரதி கலை மன்றம். கடைகளிலும், அமேசான் போன்ற முக்கிய இணையவழி வியாபாரச் சந்தைகளிலும் முகக்கவசங்கள் முற்றிலும் கிடைக்காத சூழ்நிலையில், தம் தன்னார்வலர்களுக்கு, தையல் தெரிந்தவரின் மூலம், இணைய வழி வகுப்பொன்றை ஏற்பாடு செய்தது. பத்துக்கும் மேற்பட்ட மகளிர் அணி, ஹூஸ்டன் மாநகரில் பல பகுதிகளில் களம் இறங்கினர். வண்ணமயமான பாதுகாப்புக் கவசங்கள் தயாராயின. முன்னணி போர்வீரர்களாக உலகைக் காக்க முனைந்த செவிலியர்களுக்கும், பல்வேறு முதியோர் தங்குமிடங்களுக்கும் அக்கவசங்கள் வழங்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, அன்றாட அத்தியாவசியப் பொருட்களான மளிகைச் சாமான்கள், மருந்து வகைகள் வாங்க வெளியே செல்ல முடியாத சூழலில் இருந்தவர்களுக்கு இவ்வகைச் சேவைகளையும் வழங்கி வந்தது பாரதி கலை மன்றம். உதவும் மனமிருந்தால் போதும் மார்க்கம் பிறக்கும் என்பதற்கு மீண்டும் இதுவொரு சான்றாக அமைந்துள்ளது எனலாம்.

# மத்திய இல்லினாய் தமிழ்ச்சங்கம்




உலகையே வாட்டி வதைத்து வரும் கோவிட்-19 ஒட்டுண்ணியால், வழக்கமாகக் கூடிக் கொண்டாடும் எந்த விழாக்களும் நடத்த முடியவில்லை. சிறுவர்கள் குடும்பத்துடன் வீட்டில் வெகுநேரம் கூடியிருப்பதால், திருக்குறள் போன்ற நீதி நூல்கள் மற்றும் பிற நீதிக் கதைகளைக் குடும்பத்துடன் வாசிப்பதைச் சங்கத்தினருக்கு அறிமுகப்படுத்தினோம். நோய்த் தடுப்புமுறை, நோய் எதிர்ப்பு சக்தி வளர்த்தல், இயற்கை சார்ந்த வாழ்வுமுறை போன்ற பல இணையதள நிகழ்வுகளில் சங்கத்தினர் பங்கேற்றுப் பயன்பெற்றனர். குறிப்பாக, திரு சுந்தர் சுப்பிரமணியன் நடத்திய திருமூலர் மூச்சுப் பயிற்சியில் பலர் கலந்து கொண்டனர். வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை உருவாக்கியுள்ள "உதவும் இதயங்கள்" அமைப்பில் எங்கள் சங்கத்தின் அங்கத்தினர் திரு. செங்குட்டுவன் அவர்கள் சேர்ந்து மக்கள் பணியாற்றவிருப்பது எங்கள் சங்கத்தின் பெருமை ஆகும்.

14. “காக்கை கருநீலி கரந்தை கரிசாலை வாக்குக்கு இனிமை வல்லாரை இவ் வைந்தும்; பாக்கள வேணும் பாலில் கரைத்து உண்ண ஆக்கைக்கு ஓதாது உணர்ந்தேன் மீதானம் உற்றேன் அழிவு இல்லை ஆயிரம் எட்டு ஆண்டும்” - இந்தப் பாடலில் காக்கை என்பது அவரி எனப்படும் ஒரு....

அ) மரம் ஆ) கொடி இ) செடி. ஈ) வேர்











# மிச்சிகன் தமிழ்ச்சங்கம் – விழித்திரு, விலகி இரு, வீட்டில் இரு




கொரானாவின் காரணமான சமூகக் கட்டுப்பாடு காலத்திலும், மிச்சிகன் தமிழ்ச்சங்கம், இலக்கியம், குழந்தைகள் விளையாட்டு, மருத்துவம், போன்ற பல்வேறு மெய்நிகர் நிகழ்ச்சிகளை நடத்தியது. மேலும், குழந்தைகள் கதை, சதுரங்க விளையாட்டு போட்டி போன்ற நிகழ்ச்சிளும் நடக்கவிருக்கின்றன.

மிச்சிகன் சங்கத் தமிழ்ப் பள்ளியிலிருந்து டிராய் பள்ளி மாவட்டத்திற்கு "பிரிட்ஜ் தி கேப்" திட்டத்திற்காக $1000-க்கான காசோலையை, தமிழ்ப்பள்ளி முதல்வர் திருமதி அபிராமி சுவாமிநாதன், அவர்கள் நேரடியாகச் சென்று டிராய் பள்ளி மாவட்ட அலுவலரிடம் வழங்கினார். இந்த "பிரிட்ஜ் தி கேப்" திட்டம் வறுமையில் பின்தங்கிய டிராய் பள்ளி மாவட்ட குடும்பங்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மோர்ஸ் தொடக்கப்பள்ளி வளாகத்தில் வாராந்திர உணவுப் பைகள் மற்றும் மளிகைப் பொருட்களை வழங்குகிறது. நன்கொடை கொடுத்து ஆதரவு அளித்த மிச்சிகன் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், தமிழ்ப்பள்ளி பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்!

சுமார் 100 குழந்தைகளின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் கிளீனர்ஸ் தொண்டு நிறுவனத்துடன் சேர்ந்து நமது சங்கத்தின் தமிழ்ப் பள்ளிகள் டெட்ராய்ட்-ல் உள்ள 'லவ்விங் அகெடமி (Loving Academy)' பள்ளியைத் தேர்வு செய்துள்ளது. இதன் மூலம் ஆறு மாதங்களுக்கு, 100 குழந்தைகளின் குடும்பத்திற்கு, 35-40 பவுண்ட் எடையுள்ள காய்கறிகள், பழங்கள், பால், முட்டை, இறைச்சி, அரிசி மற்றும் டின்னில் அடைக்கப்பட்ட உணவு வகைகள் மாதம் தோறும் இவர்களுக்கு வழங்கப்படும். முதல் தவணையாக மூன்று மாதங்களுக்கு $3,375-க்கான காசோலை க்ளீனர்ஸ் (Gleaners) நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் சிறு முயற்சி வரும் காலங்களில் தொடர்ந்து நடைபெற அனைவரும் பங்கு பெறவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.



15. படத்திலுள்ள நோய் தீர்க்கும் பொருளின் பெயர் என்ன ?

அ) கடுகு ஆ) திப்பிலி. இ) நிலவேம்பு ஈ) சிறு தேக்கு

# பேரவையின் உதவும் இதயங்கள் குழு




வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் "உதவும் இதயங்கள்" குழு, அமெரிக்க வாழ் தமிழரின் நண்பருக்கோ, உறவினருக்கோ எதிர்பாராத மரணம் நிகழும்போது, உடல் தகனம் செய்யும் முறை, புதைக்கும் முறை அல்லது தாய் நாட்டிற்கு எடுத்துச் செல்லும் முறை குறித்த அனைத்து விவரங்களும் அவர்களுக்கு உடனடியாகக் கிடைத்திட தேவையான உதவிகளை செய்து வருவது நீங்கள் அறிந்ததே.

24x7 உதவும் இதயங்கள், தொலைபேசி எண், 1-866-FETNAHH

பேரவையின் உதவும் இதயங்கள் கடந்த சில மாதங்களில் செய்த சில பணிகளை கீழே காணலாம்.

- இதுவரை 105 அவசர தொலைபேசி அழைப்புகளை உதவும் இதயங்கள் குழுவினர் ஏற்று அவர்களுக்கு தேவையான அறிவுரைகளையும், உதவிகளையும் வழங்கியுள்ளனர்
- அவசர கால சூழலை நல்ல திட்டமிடலோடு மேற்கொள்ளும் வழிமுறையை, உதவும் இதயங்கள் குழுவினர் ஆராய்ந்து ஒரு வழிகாட்டியை உருவாக்கி வருகின்றனர்
- கொரோனா பாதிப்பில் தவிக்கும் மக்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து வருகின்றனர்.

உதவும் இதயங்கள் குழுவில் இணைந்து பணியாற்ற, அமெரிக்காவில் உள்ள அனைத்துத் தமிழ்ச்சங்கங்களையும் தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டதற்கிணங்க பல்வேறு சங்கங்களிருந்தும் பல தன்னார்வலர்கள், ஆர்வமுடன் குழுவில் இணைந்துள்ளனர். இவர்களது உதவியுடன், உதவும் இதயங்கள் அமைப்பு, மக்களுக்கு வேண்டிய அவசரகால உதவிகளைத் தொடர்ந்து செய்து வருவதில் மகிழ்ச்சியடைகிறது.

உங்கள் பேராதரவிற்கு நன்றி,

**உதவும் இதயங்கள்**
**வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**

16) 'வாதசுர நீரேற்ற மாற்றுஞ் சுரதோஷங் காதமென வோடக் கடியுங்காண்-மாதரசே பித்த மயக்கறுக்கும் பின்புதெளி வைக்கொடுக்குஞ் சுத்த ____________ றொழில்' - என வாதசுரம், நீரேற்றம், சுரம், பித்த மயக்கம் போனறவற்றை நீக்கும் மருந்தாக தேரையர் எனும் சித்தர் கூறும் மருந்து எது?

அ) நிலவேம்பு. ஆ) மலைப்பூண்டு இ) கல் தாமரை ஈ) கீழ் வாய் நெல்லி









# சிகாகோ தமிழ்ச்சங்கம்

சமீபத்திய கொரோனா தொற்றுப் பரவலின் காரணமாக, சிகாகோ தமிழ்ச்சங்கம் வழக்கமாக நடத்திவரும் நிகழ்ச்சிகளை நடத்த இயலாத நிலை உள்ளதால், இணைய வழி மூலம் நிகழ்வுகளை நடத்தி வருகிறது. கொரோனா பேரிடர் நேரத்தில், 'கொரோனா விழிப்புணர்வு பல்வழிக் கூட்டம், கோவிட்-19 தொடர்பான குடியுரிமை குறித்த கலந்துரையாடல், கொரோனா தொற்றினால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகள்' என சங்கத்தினால் இயன்ற பணிகள் அனைத்தும் செய்து வருகிறோம். சிகாகோ தமிழ்ச்சங்கத்தின் புதிய செயற்குழு (2020-22) இந்த ஆண்டு ஜூன் 14 ஆம் நாளன்று பொறுப்பேற்றுக் கொண்டது. இதன் தொடர்ச்சியாக, இச்செயற்குழு சாம்பர்க் நகரிலுள்ள திருவள்ளுவர் சிலைக்கு முன் ஒன்று கூடி, வள்ளுவருக்கு மாலை அணிவித்து, தனது தமிழ்ச் சேவையின் மற்றுமொரு புது அத்தியாயத்தை தொடங்கியது. எங்களது செயற்குழு கூட்டங்களும் இணைய வழி நிகழ்ச்சிகளாகவே அமைக்கப்படுகின்றன.

வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையின் 2020 இணைய வழித் தமிழ் விழா சிறப்பாக அமைந்திட சிகாகோ வாழ் தமிழ் நெஞ்சங்களின் சார்பாக, சிகாகோ தமிழ்ச்சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.



# டெலவர் பெருநிலத் தமிழ்ச்சங்கம்

அனைத்து டெலவர் பெருநிலத் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப்பள்ளிகளும் ஒலி/ஒளியுடன் பல்வழி இணைப்பு வாயிலாக கற்பித்தலை தங்கு தடையின்றி மாணவர்களுக்கு வழங்கி வருகிறன. கரோனாவின் கடுமையான பாதிப்பினால் அசாதாரணமான சூழல் நிலவிவரும் இச்சமயத்தில், நம் மக்கள் பயன்பெறும் வகையில் மெய்நிகர் நிகழ்ச்சிகளாய் கரோனா விழிப்புணர்வு கூட்டம், இமிகிரேஷன் தொடர்பான தெளிவுரை, வில் அண்ட் எஸ்டேட் பிளானிங், இந்திய புலம்பெயர்ந்தோரிடம் கரோனா ஏற்படுத்திய பாதிப்பு, சித்த மருத்துவமும் கரோனாவும் மற்றும் லைஃப் சாய்சஸ் என்கிற தலைப்பில் நியூயார்க் லைஃப் இன்சூரன்ஸின் விளக்க கூட்டமும் நடைபெற்றன.

சித்திரை விழா மற்றும் அன்னையர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் மதுரை முத்துவின் இணைய வழி நகைச்சுவை கலந்துரையாடல் வாஷிங்டன் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. குழந்தைகளின் தமிழ் மற்றும் திருக்குறள் ஆர்வத்தை வளர்க்கும் விதமாக TAGDV திருக்குறள் நாள் துவங்கி உள்ளது. குழந்தைகளின் திருக்குறள் மற்றும் குறள் விளக்க காணொலியை அனைத்து உறுப்பினர்களும் பார்த்துப் பயன்பெறும் வண்ணம் சமூக வலைத்தளங்களின் வாயிலாக பகிர்ந்து பயன் பெற ஆவண செய்துள்ளோம்.




17) "தன்மமி ரண்டேயூண் டப்பிமுக்காற் கொள்ளினினன்; சின்மதலை காளைகடல் சேர்பருவ-தன்மூகுர்த்த மொன்றுக்கு நான்குக்கு ளோதுமிரண் டுக்குளுண்பர்; நன்றுக்குத் தீயோர் நயந்து" என்னும் பாடலில், தேரையர், நாளின் முதலாவது உணவை சூரிய உதய நேரத்திலிருந்து சரியாக ஒன்றரை மணி நேரத்திற்குள்ளும், இரண்டாவது உணவை சூரிய உதயத்தில் இருந்து ஆறு மணி நேரத்திற்குள்ளும், மூன்றாவது உணவை சூரியன் மறைந்து மூன்று மணி நேரத்திற்குள்ளும் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த கால முறை தவறி உண்டால் உடலுக்கு தீமை உண்டாகும் என்கிறார். அவர் ஒருநாளில் எப்படி உண்டால் நன்மையளிக்கும் என்று கூறுகிறார்?

அ) இருமுறை. ஆ) பசித்தபின் இ) மூன்றுமுறை ஈ) அவ்வப்போது சிறிதளவு




18) “ஆதியினிப்பு நடு வாம்பிர நீருப்பொடுசாகதி யுறைப்பப்பாலந்தத்திற் - கோதுவர்ப் பாந்ததியுப்பூறிய காயாதி வகை சேருணவை மாந்ததி மாண்புறுவாய்” என்ற பதார்த்த குண சிந்தாமணிப் பாடல், சாபிடும்போது எந்தச் சுவை உணவை முதலில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறது?

அ) இனிப்பு. ஆ) புளிப்பு இ) துவர்ப்பு ஈ) துவர்ப்பு,




## உங்களுக்குத் தெரியுமா - விடைகள்

1-ஆ; 2-அ; 3-ஈ; 4-ஈ; 5-இ 6-ஈ; 7-அ; 8-ஈ; 9-ஈ; 10-ஈ; 11-ஈ;
12-ஜப்பான் - ஹோமியோபதி; 13-ஈ; 14-இ; 15-ஆ; 16-அ; 17-அ; 18-அ

# வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

**Federation of Tamil Sangams of North America**

## 2020ஆம் ஆண்டுத் தமிழ்விழா

**(இணைய வழி)**

**தேதி: ஜூலை 3, 4 & 5**

**நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க (for links) :**

**https://fetnaconvention.org/**

### முதல் நாள் ஜூலை 3, வெள்ளிக் கிழமை Day One, Friday, July 3rd

| | |
|---|---|
| 5:30 pm to 11:00 pm ET | 2:30 pm to 8:00 pm PT |

**நிகழ்ச்சிகள் Events**

Starts at 10:30 am

தமிழ்த்தாய் வாழ்த்து • வரவேற்புரை • திருக்குறள் ஓதுதல் • சிறப்புச் சொற்பொழிவுகள் • கவியரங்கம் • தொழில் முனைவோர் கூட்டம்

### இரண்டாம் நாள் ஜூலை 4, சனிக்கிழமை Day Two, Saturday, July 4th

| | |
|---|---|
| 10: 30 am to 1:15 pm ET | 7:30 am to 10:15 am PT |
| 4:00 pm to 11:00 pm ET | 1:00 pm to 8:00 am PT |

Break

**நிகழ்ச்சிகள் Events**

சிறப்புச் சொற்பொழிவுகள் • மக்களிசை • இசைத்தமிழ் • வற்(ர்)மக் கலை • இளையோர் கலந்துரையாடல் • திரைப்படக் கலைஞர்கள் நிகழ்ச்சி • பட்டி மன்றம்

### மூன்றாம் நாள் ஜூலை 5 ஞாயிற்றுக் கிழமை Day Three, Sunday, July 5th

| | |
|---|---|
| 10:00 am to 5:00 pm ET | 7:00 am to 2:00 pm PT |

**நிகழ்ச்சிகள் Events**

மரபுக் கலை • உலகத் தமிழர்கள் விழிப்புணர்வு • மெல்லிசை நிகழ்ச்சி • தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் • நன்றியுரை

இணைய வழியில் நடக்கும் பேரவையின் மூன்று நாட்கள் 2020 தமிழ்விழா நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

சுந்தர் குப்புசுவாமி, தலைவர்

& பேரவைச் செயற்குழு, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை